இனிமையான குழந்தைகளே ! குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானத்தின் இனிமையான முரளியை சொல்லி உயிரை காப்பாற்றுவதற்காக, உயிரை காப்பாற்றக்கூடிய பிரானேஸ்வர் பாபா வந்திருக்கின்றார்.

**கேள்வி : அதிர்ஷ்டசாலி குழந்தைகளுக்கு எந்த நிச்சயம் ஏற்படுகிறது ?**

**பதில் :** நம்முடைய உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்காக சுயம் தந்தையே வந்திருக்கின்றார். தந்தையிடமிருந்து பக்தியின் பலன் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. மாயை சிறகுகளை துண்டித்து விட்டது. அந்த சிறகுகளை கொடுப்பதற்காக, தன்னுடன் அழைத்துச் செல்வதற்காக தந்தை வந்திருக்கின்றார். இந்த நிச்சயம் அதிர்ஷ்டசாலி குழந்தைகளுக்குத்தான் ஏற்படுகிறது.

**பாட்டு : இன்று யார் வந்தது அதிகாலையில்......**

**ஓம் சாந்தி.** அதிகாலையில் யார் வந்து முரளியை வாசிக்கிறார்கள். உலகம் முழுவதும் காரிருளில் இருக்கிறது. ஞானக்கடல் பதீத பாவனர் பிரானேஸ்வர் தந்தையிடமிருந்து நீங்கள் முரளியை கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். அவர் உயிரை காப்பாற்றக் கூடிய ஈஸ்வரன் ஆவார். ஏ! ஈஸ்வரா இந்த துக்கத்திலிருந்து காப்பாற்று என கூறுகிறார்கள் அல்லவா. அவர்கள் எல்லைக்குட்பட்ட உதவியை கேட்கின்றனர். இப்போது உங்களுக்கு எல்லையற்ற உதவி கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. ஏனென்றால் எல்லையற்ற தந்தையல்லவா. ஆத்மாவும் குப்தமாக இருக்கின்றது. தந்தையும் குப்தமாக இருக்கிறார் என உங்களுக்கு தெரியும். குழந்தைகளின் உடல் பிரத்யக்ஷமாக இருக்கும் பொழுது பாபாவும் பிரத்யக்ஷம் ஆகிறார். ஆத்மா குப்தமாக இருக்கின்றது என்றால் தந்தையும் குப்தமாக இருக்கிறார். நமக்கு எல்லையற்ற சொத்து கொடுப்பதற்காக தந்தை வந்திருக்கின்றார் என நீங்கள் அறிகிறீர்கள். அவருடையது ஸ்ரீமத் ஆகும். அனைத்து சாஸ்திரங்களுக்கும் தாயாக விளங்கும் கீதை பிரசித்தமானது. அதில் பெயர் மட்டும் மாற்றப்பட்டிருக்கின்றது. இப்போது ஸ்ரீமத் பகவான் வாக்கு என உங்களுக்கு தெரியும் அல்லவா. கீழான நிலையில் இருப்பவர்களை உயர்ந்தவராக ஒரு தந்தை தான் மாற்றுகிறார் என நீங்கள் அறிகிறீர் கள். அவரே நரனிலிருந்து நாராயணனாக மாற்றுகிறார். இதுவே சத்ய நாராயணனின் கதையாகும். அமரக்கதை, அமர புரிக்கு அதிபதியாக மற்றும் நரனிலிருந்து நாராயணனாக மாறுவதற்கானது என பாடப்படுகிறது. இது மரண உலகம் ஆகும். பாரதம் தான் அமரபுரியாக இருந்தது. இது யாருக்கும் தெரியவில்லை. இங்கு தான் அமரர் தந்தை பாரத வாசிகளுக்கு சொல்லிக் கொடுக்கின்றார். ஒரு பார்வதி மற்றும் ஒரு திரௌபதி இல்லை. இங்கே பல குழந்தைகள் கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். பிரம்மா மூலமாக சிவபாபா கூறுகின்றார். நான் பிரம்மா மூலமாக இனிமையிலும் இனிமையான ஆத்மாக்களுக்கு கூறுகின்றேன் என பாபா கூறுகின்றார். குழந்தைகள் நிச்சயமாக ஆத்ம அபிமானியாக வேண்டும் என பாபா புரிய வைக்கின்றார். பாபா தான் மாற்ற முடியும். உலகத்தில் ஒரு மனிதருக்கு கூட ஆத்மாவை பற்றிய ஞானம் இல்லை. ஆத்மாவைப் பற்றிய ஞானமே இல்லை என்றால் பரம்பிதா பரமாத்மாவை பற்றிய ஞானம் எப்படி இருக்கும். ஆத்மாவே பரமாத்மா என்று கூறிவிடுகிறார்கள். எவ்வளவு பெரிய தவறில் முழு உலகமும் மாட்டிக் கொண்டிருக்கின்றது. இச்சமயம் மனிதர்கள் எதற்கும் பயனற்று இருக்கின்றார்கள். தன்னுடைய வினாசத்திற்காக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றது. குழந்தைகளாகிய உங்களுக்கு இது ஒன்றும் புதியது அல்ல. நாடகப்படி அவர்களுடைய பாகம் இருக்கிறது என அறிகிறீர்கள். நாடகம் என்ற பந்தனத்தில் கட்டுப்பட்டிருக்கிறார்கள். இன்று உலகத்தில் சண்டை சச்சரவுகள் நிறைய காணப்படுகின்றது. குழந்தைகளாகிய உங்களுக்கு வினாச காலத்தில் அன்பு புத்தி இருக்கிறது. யாருக்கு தந்தையிடம் விபரீத புத்தி இருக்கிறதோ அவர்கள் அழிந்து விடுவார்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இந்த உலகம் மாற வேண்டும். உண்மையில் மகாபாரதப் போர் நடந்தது, பாபா இராஜ யோகத்தை கற்றுக் கொடுத்தார் என நீங்கள் அறிகிறீர்கள். சாஸ்திரங்களில் ஒட்டு மொத்த வினாசத்தையும் எழுதிவிட்டர்கள். ஆனால் மொத்தமாக வினாசம் நடப்பதில்லை. பிறகு பிரளயம் ஆகிவிடும். மனிதர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். 5 தத்துவங்கள் மட்டுமே இருக்கும். இவ்வாறு நடக்காது. பிரளயம் நடந்துவிட்டால் மனிதர்கள் எங்கிருந்து வருவார்கள். கிருஷ்ணர் விரலை சூப்பிக்கொண்டு ஆல இலையில் மிதந்து வந்தார் என காட்டுகிறார்கள். குழந்தைகள் இவ்வாறு எப்படி வரமுடியும். சாஸ்திரங்களில் இவ்வாறெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அதைப் பற்றி கேட்காதீர்கள். இப்போது குமாரிகளாகிய உங்கள் மூலமாக இந்த வித்வான்கள், பீஷ்மர் போன்றோர்க்கு கூட ஞான அம்பு எய்த வேண்டும். இன்னும் போகப்போக அவர்களும் கூட வருவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள்

தீவிரமான பாபாவின் அறிமுகத்தை அனைவருக்கும் கொடுப்பீர்களோ அவ்வளவு தாக்கம் ஏற்படும். ஆம். தடைகளும் ஏற்படும் அசுர சம்பரதாயத்தினரால். இந்த ஞான யக்யத்தில் பல தடைகள் ஏற்பட்டதாக பாடப்பட்டிருக்கிறது. நீங்கள் கற்றுத்தர முடியாது. ஞானம் மற்றும் யோகத்தை பாபாதான் கற்று கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சத்கதியை கொடுக்கும் வள்ளல் ஒரு தந்தை தான். அவரே பதீதர்களை பாவனமாக மாற்றுகின்றார். நிச்சயமாக பதீதர்களுக்குத் தான் ஞானம் கொடுப்பார் அல்லவா. தந்தையை எப்போதாவது சர்வ வியாபி என்று கூறுவார்களா? நாம் தங்க புத்தி உடையவராகி பாரஸ்நாத் ஆவோம் என நீங்கள் அறிகிறீர்கள். மனிதர்கள் எவ்வளவு கோவில்களை கட்டுகிறார்கள். ஆனால் அவர் யார், என்ன செய்து விட்டு போனார் பொருள் எதுவும் புரிந்து கொள்ளவில்லை. பாரஸ்நாத் கோவில் கூட இருக்கின்றது. பாரதம் பாரஸ்புரியாக இருந்தது. தங்கம், வைரம், வைடூரியங்களின் மாளிகை இருந்தது. இது நேற்றைய விஷயம் ஆகும். அவர்கள் ஒரு சத்யுகத்தை லட்சக்கணக்கான ஆண்டுகள் என கூறிவிட்டார்கள். இந்த முழு நாடகமும் 5000 வருடம் தான் என்று பாபா கூறுகின்றார். இன்றைய பாரதம் எப்படி இருக்கிறது நேற்றைய பாரதம் எப்படி இருந்தது என கூறலாம். லட்சக்கணக்கான ஆண்டுகள் என்றால் யாருக்கு நினைவிருக்கும். குழந்தைகளாகிய உங்களுக்கு நினைவு இருக்கிறது. இது 5000 வருடத்தின் விஷயம் ஆகும். யோகத்தில் அமருங்கள் என பாபா கூறுகின்றார். தன்னை ஆத்மா என்று உணர்ந்து பாபாவை நினையுங்கள். இது ஞானம் அல்லவா. அவர்கள் ஹடயோகி ஆவார்கள். கால் மேல் காலை போட்டு அமருகிறார்கள் அல்லவா. என்னென்ன செய்கிறார்கள். தாய்மார்களாகிய நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது. அமர கூட முடியாது. பக்தி மார்க்கத்தில் எத்தனை படங்கள் இருக்கின்றன. இனிமையான குழந்தைகளே இவ்வாறெல்லாம் நீங்கள் செய்ய வேண்டியதில்லை என பாபா கூறுகின்றார். பள்ளிக் கூடத்தில் குழந்தைகள் முறைப்படி அமருகிறார்கள். பாபா அதுவும் கூறுவதில்லை. எப்படி வேண்டுமோ அவ்வாறு அமருங்கள் உட்கார்ந்து களைப்படைந்து விட்டால் படுத்துக் கொள்ளுங்கள். பாபா எந்த விஷயத்திலும் தடுப்பதில்லை. இது முற்றிலும் எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய விஷயம் ஆகும். இதில் துன்பப்படுவதற்கு ஏதும் இல்லை. எவ்வளவு தான் நோயாக இருந்தாலும் கேட்டுக்கொண்டே சிவபாபா வின் நினைவில் இருந்து கொண்டே உடலிலிருந்து உயிர் பிரியலாம். வாயில் கங்கா ஜலம்.... அப்போது உடலிலிருந்து உயிர் போகட்டும் என பாடப்பட்டிருக்கிறது. இது அனைத்தும் பக்தி மார்க்கத்தின் விஷயங்கள் ஆகும். உண்மையில் இது ஞான அமிர்தத்தின் விஷயமாகும். உண்மையில் இப்படி உயிர் உடலிலிருந்து போக வேண்டும் என நீங்கள் அறிகிறீர்கள். குழந்தைகளாகிய நீங்கள் வருகின்றீர்கள் என்றால் என்னை விட்டு விட்டு செல்கிறீர்கள். நான் உங்களை உடன் அழைத்து செல்வேன் என பாபா கூறுகின்றார். குழந்தைகளாகிய உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காகவே நான் வந்திருக் கிறேன். உங்களுக்கு உங்களுடைய வீட்டைப் பற்றியும் தெரியவில்லை, ஆத்மாவைப் பற்றியும் தெரிய வில்லை. மாயா முற்றிலும் உங்களுடைய சிறகுகளை துண்டித்து விட்டது. ஆகையால் ஆத்மா பறக்க முடியாது. ஏனென்றால் தமோபிரதானமாக இருக்கிறது. சதோபிரதானமாகாத வரை சாந்தி தாமத்திற்கு எப்படி போக முடியும். நாடகத்தின் படி அனைவரும் தமோபிரதானம் ஆக வேண்டும் என அறிகிறீர்கள். இச்சமயம் முழு மரம் செல்லரித்திருக்கின்றது. இங்கே யாருக்கும் சதோபிரதான நிலை கிடையாது. இங்கே ஆத்மா தூய்மையாகிவிட்டால் பிறகு இங்கேயே இருக்க முடியாது. ஒரேடியாக ஓடிவிடும். அனைவரும் முக்தி அடைவதற்காக பக்தி செய்கிறார்கள். ஆனால் ஒருவர் கூட திரும்பிப்போக வில்லை. சட்டம் கிடையாது. பாபா இந்த ரகசியம் அனைத்தையும் தாரணை செய்வதற்காக புரிய வைக்கின்றார். இருப்பினும் பாபாவை நினைப்பது, சுயதரிசன சக்கரதாரியாவது முக்கியமான வி யமாகும். விதையை நினைவு செய்வதால் முழு மரமும் புத்தியில் நினைவிற்கு வரும். மனித சிருஷ்டியின் விதை ரூபமானவர் அனைவருக்கும் ஒரு தந்தையே என உலகத்தில் யாருக்கும் தெரியவில்லை. கிருஷ்ணர் பகவான் கிடையாது. கிருஷ்ணரை சியாம் சுந்தர் என்கிறார்கள். ஏதோ விஷம் நிறைந்த பாம்பு கடித்ததில் அவர் கருப்பாகிவிட்டார் என்பதெல்லாம் கிடையாது. காமச்சிதையில் ஏறியதால் மனிதர்கள் கருப்பாகி விட்டார்கள். இராமரை கூட கருப்பாக காட்டுகிறார்கள். அவரை எது கடித்தது. எதுவும் புரிந்து கொள்ளவில்லை. யாருடைய அதிர்ஷ்டத்தில் இருக்கிறதோ, நிச்சயம் இருக்கிறதோ கண்டிப்பாக அவர்கள் சொத்தை அடைவார்கள் நிச்சயம் இல்லை என்றால் ஒரு போதும் புரிந்து கொள்ள மாட்டார்கள். அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் என்ன முயற்சி செய்வார்கள். அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் எதுவுமே புரிந்து கொள்ளாதது போல அமர்ந்திருப்பார்கள். எல்லையற்ற சொத்து கொடுப்பதற்காக தந்தை வந்திருக்கின்றார் என்பதை புரிந்து கெள்வது கிடையாது. யாராவது புதிய ஆட்கள் மருத்துவ கல்லூரியில் அமர்ந்தால் என்ன புரிந்து கொள்வார்கள். எதுவும் புரியாது. இங்கேயும் அவ்வாறே அமருகிறார்கள். இந்த அழியாத

ஞானம் வினாசம் ஆகாது. பிறகு அவர்கள் என்ன செய்வார்கள். இராஜ்ஜியம் ஸ்தாபனையாகிக் கொண்டிருக் கின்றது. வேலைக்காரர்கள், பிரஜைகள், பிரஜைகளுக்கு வேலைக்காரர்கள் அனைவரும் வேண்டும் அல்லவா. இன்னும் போகப்போக சிறிது படிப்பதற்கு முயற்சி செய்வார்கள். ஆனால் கடினமாக இருக்கும். ஏனென்றால் அச்சமயம் நிறைய சண்டைகள் நடக்கும். ஒவ்வொரு நாளும் புயல் பெருகிக் கொண்டே யிருக்கும். இத்தனை சென்டர்கள் இருக்கிறது என்றால் பலர் வந்து நன்கு புரிந்து கொள்வார்கள். பிரம்மா மூலமாக ஸ்தாபனை என்று எழுதப்பட்டிருக்கிறது. வினாசம் கூட எதிரில் இருக்கிறது. வினாசம் நடந்து தான் ஆக வேண்டும். பிறப்பு விகிதம் குறைய வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் மரம் விருத்தியடைந்து கொண்டேயிருக்கும். எதுவரை பாபா இருக்கிறாரோ அதுவரை அனைத்து தர்ம ஆத்மாக்களும் இங்கு வந்து தான் ஆக வேண்டும். போகக்கூடிய நேரம் வரும்போது ஆத்மாக்கள் வருவது நின்றுவிடும். இப்போது அனைவரும் வரவேண்டும். ஆனால் இந்த விஷயங்களை யாரும் புரிந்து கொள்வதில்லை. பக்தர்களை பாதுகாப்பவர் பகவான் என்று கூறுகிறார்கள். நிச்சயமாக பக்தர்களுக்கு ஆபத்து வருகிறது. இராவண இராஜ்ஜியத்தில் முற்றிலும் அனைவரும் பாவாத்மாவாகி விட்டார்கள். கலியுக கடைசியில் இராவண இராஜ்ஜியமாக இருக்கிறது. சத்யுக ஆதியில் இராம இராஜ்ஜியம் இருக்கிறது. இச்சமயம் அனைவரும் இராவண சம்பிரதாயத்தினர் அல்லவா. இன்னார் சொர்க்கவாசி ஆகிவிட்டார் என கூறுகின்றனர் என்றால் அதன் பொருள் இது நரகம் அல்லவா. சொர்க்கவாசி ஆகிவிட்டார் என்றால் நல்ல பெயராகும். அப்போது இங்கே என்னவாக இருந்தார். நிச்சயமாக நரகவாசியாக இருந்தார். நாம் நரகவாசி என்பதையும் புரிந்து கொள்வதில்லை. இப்போது தந்தையே வந்து சொர்க்கவாசியாக மாற்றுகின்றார் என்று புரிந்து கொள்கிறீர்கள். சொர்க்கத்தின் தந்தை என்று பாடப்படுகிறது. அவரே வந்து சொர்க்கத்தை ஸ்தாபனை செய்வார். பதீத பாவன சீதாராம் என அனைவரும் பாடிக் கொண்டிருக் கின்றார்கள். நாங்கள் பதீதமாக இருக்கின்றோம் பாவனமாக்கக்கூடியவர் நீங்கள். அவர்கள் அவைரும் பக்தி மார்க்கத்தின் சீதைகள். பாபா இராமர் ஆவார். யாருக்கும் நேரடியாக சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா மூன்றாவது கண் கொடுத்திருக்கின்றார். நீங்கள் தனி உலகத்தை சார்ந்தவராகி விட்டீர்கள்.

இப்போது அனைவரும் தமோபிரதானமாக நிச்சயமாக மாறவேண்டும். அப்போது தான் பாபா வந்து சதோபிரதானமாக மாற்றுவார் என பாபா புரிய வைக்கின்றார். பாபா எவ்வளவு நன்றாக புரிய வைக்கின்றார், குழந்தைகளாகிய நீங்கள் உங்களின் சேவையை செய்யுங்கள், பாபாவை நினைவு செய்ய வேண்டும் என்ற ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்பதை கூறுகின்றார். சதோபிரதானமாவதற்கு வேறு வழி கிடையாது. அவைருக்கும் ஆன்மீக சர்ஜன் ஒருவர் தான். அவரே வந்து ஆத்மாக்களுக்கு ஊசி போடுகின்றார். ஏனென்றால் ஆத்மா தமோபிரதானமாகிவிட்டது. பாபாவிற்கு அழியாதது சர்ஜன் என்று பெயர். ஆத்மா அழியாதது, பரமாத்மா தந்தையும் அழிவற்றவர். இப்போது ஆத்மா சதோபிரதானத்திலிருந்து தமோபிரதானமாகியிருக்கிறது. இதற்கு ஊசி போட வேண்டும். குழந்தைகளே தன்னை ஆத்மா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். மற்றும் தன்னுடைய தந்தையை நினையுங்கள் என பாபா கூறுகின்றார். புத்தி யோகம் மேலே இருந்தால் இனிமையான வீட்டிற்கு போகலாம். நாம் நம்முடைய இனிமையான வீட்டிற்கு போக வேண்டும் என்பது உங்களுடைய புத்தியில் இருக்கிறது. நல்லது.

**இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.**

**தாரணைக்கான முக்கிய சாரம் :**

1. ஞானம் மற்றும் யோகத்தினால் புத்தியை தங்கமாக மாற்ற வேண்டும். எவ்வளவு தான் நோய் இருந்தாலும் துன்பம் இருந்தாலும் அதிலும் ஒரு தந்தையை நினைக்க வேண்டும்.

2. தன்னுடைய உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்கிக் கொள்வதற்கு முழுமையிலும் முழுமையாக நிச்சய புத்தி உடையவராக வேண்டும். புத்தியோகம் தன்னுடைய இனிமையான அமைதியான வீட்டில் வைக்க வேண்டும்.

**01.08.2011**

வரதானம் : நிமித்தம் என்ற நினைவு மூலமாக தன்னுடைய ஒவ்வொரு எண்ணத்தின் மீதும் கவனம் வைக்கக்கூடிய நிவாரண (தீர்வு) சொரூபம் ஆகுக.

நிமித்தமாக இருக்கக்கூடிய ஆத்மாக்கள் மீது அனைவரின் பார்வையும் இருக்கிறது. நிமித்தமாக இருக்கக்கூடியவர்கள் சிறப்பாக தன்னடைய எண்ணங்கள் மீது கவனம் வைக்க வேண்டும். ஒருவேளை நிமித்தமாக இருக்கக்கூடியவர்கள் ஏதாவது காரணத்தை கூறினால் அவர்களை பின்பற்றக்கூடியவர்கள் பல காரணங்களை கூறுவார்கள். எனவே நிமித்தமாக இருக்கக்கூடியவர்களுக்குள் ஏதாவது குறையிருந்தால் அதை மறைக்க முடியாது. ஆகையால் சிறப்பாக தன்னுடைய எண்ணங்கள், வார்த்தை மற்றும் கர்மத்தின் மீது கவனம் கொடுத்து நிவாரண (தீர்வு) சொரூபம் ஆகுங்கள்.

சுலாகன் : யாருக்கு தன்னுடைய குணம் மற்றும் சிறப்புத்தன்மை பற்றியும் அபிமானம் இல்லையோ அவர்களே ஞானி ஆத்மா.

**மன சேவைக்காக : இப்பொழுது தன்னுடைய எல்லைக்குட்பட்ட விஷயங்களை விட்டுவிட்டு இரக்க மனமுடையவராகுங்கள். மனசா வேவையில் ஈடுபடுங்கள் சக்தியை கொடுங்கள், சாந்தியை கொடுங்கள் மற்றும் உதவி செய்யுங்கள். எப்போது எல்லைக்குட்பட்ட விஷயங்களிலிருந்து விடுபட்டு இருக்கிறீர்களோ, அப்போது எல்லைக்குட்பட்ட கவர்ச்சிகள் , கடின உழைப்பிலிருந்தும் விடுபடுவீர்கள்.**